1978 செப்டம்பர் 9] (மாண்புமிகு மேலவைத் தலைவர்)

உறுப்பினர் திரு. அப்துல் வகாப் அவர்கள் எழுப்பியுள்ள உரிமைப் பிரச்சினை தான் சொல்லாததை திரு. வசந்த பை அவர்கள் நீதிமன்றத்தில் அவர் சொன்னதாகச் சொல்லியிருக்கிறார்கள் என்பதுதான். அவர்கள் எடுத்துப் படித்துக் காட்டுகிறபோது, அவர்கள் கொடுத்த உவமானங்களை எல்லாம் எடுத்து அதைச் சொல்லியிருப்பதாக அவர் அநுமானிக்கிறார். அவர் கொடுத்தது உவமானமா அல்லது உவமேயமா என்பது தீர்ப்பிற்குரிய பிரச்சினை. திரு. அப்துல் வகாப் அவர்கள் பேசியதிலே இவர்கள் குறிப்பிடு வதை உவமானமாக எடுத்துச் சொன்னாரா அல்லது உவமேயமாக எடுத்துச் சொன்னாரா என்பதை நிர்ணயிக்க அவர் பேசியதை விரிவாக எடுத்துப் படிக்க வேண்டும். கோர்ட்டுக்கு அவர் என்ன கொடுத்தார் என்பதையும் பார்க்க வேண்டும். ஒருவேளை கோர்ட் தீர்ப்புக்கு அதுவே காரணமாக இருந்திருக்கிறதா என்பதைக்கூட நான் கவனிக்க வேண்டியிருந்தால் கவனிக் கிறேன். கட்சித் தலைவர்கள் எல்லாம் ஒவ்வொருவரும் அபிப்பிராயம் சொன்னதையும் கவனத்தில் வைத்துக்கொள்கிறேன். ஒன்று மட்டும் நிச்சய மாக இங்கே புரிகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்ன மாதிரி, தஸ்தாவேஜ்களைக் கொண்டு வந்து பார்த்து, நாம் முடிவு கட்ட வேண்டியிருக்கிறது. இதில் கவலைப்படுவதற்கோ, ஆத்திரப்படுவதற்கோ ஒன்றும் அவசியமில்லை. இதுபற்றி இந்தத் தொடர் கூட்டம் முடிவதற் குள்ளாக என்னுடைய தீர்ப்பைத் தெரிவிக்கிறேன்.

3. அறிவிப்பு

சென்னைப் பல்கலைக் கழக பேரவைக் குழுவிற்கு மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சென்னை பல்கலைக் கழக பேரவைக்குழுவின் தேர்தலுக்கு திருவாளர்கள் க.அறிவழகன், கே. இராமமூர்த்தி ஆகியோர் மட்டுமே போட்டியிட்டதால், உரிய முறைப்படி, அவர்கள் இருவரும் தேர்ந் தெடுக்கப்பட்டனர் என்பதனை இம்மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. சக்திமோகன் அவர்கள் மேலவை உறுப்பினர் என்ற வகையில் பதவிக் காலம் முடிந்துவிட்டதாலும், திருமதி தமிழரசி அவர்களின் பதவிக் காலம் காமராஜ் பல்கலைக் கழக பேரவைக் குழுவில் 28-10-1978 அன்று முடிவடைய இருப்பதாலும் ஏற்படும் காலியிடங்களை நிரப்ப வேண்டி, தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களால் விகிதாச்சார பிரதிநிதித்துவக் கோட்பாட்டிற் கிணங்க ஒற்றை மாற்று வாக்கு முறை மூலம் அப்பல்கலைக் கழக பொதுக்

குழுவிற்கு இரு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படவேண்டும். கீழ்க்கண்ட நாட்களை நேரடி வாக்குப் பதிவு மூலம் தேர்தல் நடைபெறும் நாட்களென நிர்ணயிக்கிறேன்.

வேட்பு மனுக்கள் பெற்றுக் கொள்வதற்கான கடைசி நாளும் நேரமும்	11—9—1978 பிற்பகல் 5 மணி.
வேட்பு மனுக்கள் ஆய்வு செய்வதற்கான கடைசி நாளும் நேரமும்	11—9—1978 பிற்பகல் 6 மணி.
வேட்பு மனுக்கள் திரும்பப் பெறுவதற்கான கடைசி நாளும் நேரமும்	12—9—1978 பிற்பகல் 5 மணி.
தேவை ஏற்படின் வாக்குப்பதிவு நடைபெறும் நாளும் நேரமும்	14—8—1978 4 மணி முதல் 6 மணி வரை.

வேட்புத் தாளை செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

4. கவன ஈர்ப்பு.

(1) விழுப்புரத்தில் நடந்த வகுப்புக் கலவரத்தில் அரசு கொடுத்த நஷ்ட ஈடு எல்லா சமூகத்தினருக்கும் கொடுக்கப்படவில்லை என்பது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திரு. கே. எஸ். அப்துல் வகாப் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பின், தேவைப்பட்டால், உறுப்பினர் கேள்விகள் கேட்டு, மேலும் விளக்கம் பெறலாம்.

THIRU K. S. ABDUL WAHAB : Under rule 42 of the Legislative Council Rules I wish to call the attention of the Hon. the Minister for Revenue to the following matter of urgent public importance, namely,

"Muslims have lost properties worth about Rs. 7 lakhs in the recent communal clashes at Villupuram but the compensation sanctioned by the Government has not been paid to all the communities alike."

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவரவர்களே, 25-7-1978 முதல் 28-7-1978 வரை விழுப்புரத்தில் நடந்த கலவரத்தில் பாதிக்கப்பட்ட ஏழை குடும்பங்களுக்கு உடனடியாக 10 கிலோ அரிசியும் 5 லிட்டர் மண்ணெண்ணெயும் கொடுக்க அரசு உத்தரவிட்டது. இது தவிர நிவாரணப் பணிகளை சரிவரக் கவனிக்க, சிறப்பாக ஒரு துணை ஆட்சியரும்